[10th March 1959

தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் காலரா, அம்மை ஆகிய நோய் களால் மக்கள் அடிக்கடி பீடிக்கப்படுகிறார்கள். மத்திய சர்க்கார் இதற்காக மானியம் அதிகமாக ஒதுக்கி இருப்பதால் எங்கள் பஞ்சாயத்தில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது "சாங்ஷன்" செய்யப் பட்ட திட்டங்களுக்கே மத்திய சர்க்காரிடம் இருந்து போதுமான பணம் வர வில்லை. இதை நேஷனல் வாட்டர் சப்ளை ஸ்கீமிலும் எடுத்துக் கொள்வதற் கில்லை. அதில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால் ஜனத்தொகை 5,000-க் குள் இருக்கவேண்டும். 'காம்ப்ரிஹென்ஸிவ் ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீமில்' எடுத்துக் கொள்ள வேண்டுமானால் ஜனத்தொகை பத்தாயிரத்திற்கு மேற்படாமல் இருக்க வேண்டும். இது இரண்டுக்கும் நடுவில் இருப்பதால் சங்கடம் இருக்கிறது.

Lac factory

* 681 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state how far the proposal to establish a lac factory at Cumbum has been implemented?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The equipment available at the lac factory previously at Denkanikota has been shifted to Cumbum on 1st February 1957. At present, the Factory is housed in two buildings which were existing already, one of which has an open dyeing yard and cement was required for washing lac. Proposals to put up new building are under consideration. Estimates have already been sanctioned for purchase of additional new equipment for the factory and the purchase will be completed before the end of this financial year.

SRI V. SANKARAN : அங்கே உள்ள விவசாயிகளுக்கு 100 மரங்கள் வளர்க்க 25 ரூபாய் வீதம் மானியம் அளிக்க திட்டம் இருக்கிறதா ? எவ் வளவு தூரம் சப்சிடி அளிக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தனிக் கேள்வி வேண்டும்.

SRI S. NAGARAJA MONIGAR : கம்பத்தில் இந்த அரக்கு உற்பத்தி செய்ய டெங்கணிக்கோட்டையில் இருந்து சாதனங்கள் எடுக்கப்பட்டதா ? திரும்ப டெங்கணிக் கோட்டையிலேயே ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்களா ? அப்படியானால் அது டெங்கணிக் கோட்டையிலேயே ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தனிக்கேள்வி வேண்டும்.

SRI M. JAGANNATHAN : What is the quantity of lac expected to be produced when the factory goes into production?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Now articles worth Rs. 15,000 are manufactured and sold; in addition to that, lac worth Rs. 12,200 is sold in auction for use in the various industries in the State. That is the capacity so far.

SRI V. SANKARAN : இந்தியாவில் இருந்து எவ்வளவு "லாக்" வெளி இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது ? இவைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.